DINAMALAR 17 OCT 09

# பிரார்த்தனை எப்படி அமைய வேண்டும்?

சத்குரு ஜக்கிவாசுதேவ்



தற்போது பலருக்குப் பிரார்த்தனை கடவுள் மீது உள்ள அன்பினால் ஏற்படுவதில்லை. கடவுள் அவர்களுக்குள் இருக்கிறார் என்ற முடிவினால் தான் அவர்களிடமிருந்து வெளிப்படுகிறது. எனக்கென்று ஒரு கடவுள் இருந்தால் அவர் எனக்குத்தானே உதவுவார் என்ற ஆசையில் பலர் அவர்களுக்கென்று சொந்தமாக கடவுளை உருவாக்கிக் கொண்டனர். குறிப்பாக, நேருக்கு நேர் மோதிக் கொள்ளும் இரு அரசர்கள் கூட அவரவர் கடவுளை வெற்றிக்காக உதவிக்கு அழைத்தனர். ஆக எந்தப் பக்கம் போர் செய்வது என்பதில் கடவுளுக்கு கூட உண்மையாகவே குழப்பம் ஏற்பட்டிருக்கும். ஒவ்வொருவரும் அதிக சத்தத்தோடு அழைப்பதால், அவர் ஒரு குழப்பமான மனிதராக இருப்பார்.

ஒரு குடும்பம் உணவு மேஜையின் முன் அமர்ந்திருந்தது. அவர்களின் இப்படி இருந்தது. உணவு பரிமாறப்பட்டவுடன் அந்தக் குடும்பத் தலைவர் அந்த உணவையும், உணவைச் சமைத்தவரையும் திட்டுவார். அதன் பின் அவர் பிரார்த்தனை செய்வார். பின்னர் அனைவரும் சாப்பிடுவர். அப்போது ஐந்து வயது சிறுமி சாப்பிடாமல், ''அப்பா, நாம் செய்யும் பிரார்த்தனையை கடவுள் கேட்பாரா?'' என்றாள்.

உடனே தந்தை, ''ஆமாம், கடவுள் எப்போதும் நம் பிரார்த்தனையைக் கேட்பார்'' என்றார். பின்னரும் அந்தச் சிறுமி, ''அப்பா, நாம் பேசுகிற மற்றவற்றையும் கூட கடவுள் கேட்பாரா?'' என்றாள். ''ஆமாம், நாம் பேசுகிற ஒவ்வொன்றையும் கடவுள் கேட்பார்'' என்றார். பின்னும் அந்தச் சிறுமி சாப்பிடாமலேயே அமர்ந்திருந்தாள். தந்தை, ''இப்போது என்ன பிரச்னை?'' என்றார். அந்தச் சிறுமி, ''கடவுள் நம் பிரார்த்தனையையும் மேலும் நாம் பேசுகிற எல்லாவற்றையும் கேட்டால், எதைத்தான் நம்புவார்?'' என்று கேட்டாள்.

கடவுளுக்கு உண்மையில் இது பெரிய பிரச்னை. அப்படித்தானே! ஏனெனில் உங்களுடைய பிரார்த்தனைகள், சாபங்கள், புலம்பல்கள், குழப்பங்கள் ஆகிய அனைத்தையும் அவர் கேட்கிறார். இவை அனைத்தையும் வைத்து எந்த ஒரு முடிவுக்கும் வருவது மிகவும் கடினம்.

உங்களை உறுதிப்படுத்துவதற்காகவோ, உங்கள் மனதை ஒருமுகப்படுத்தும் பொருட்டோ பிரார்த்தனைகள் செய்தால் சரி தான். ஆனால், கடவுளிடம் பேசுவதற்காக பிரார்த்தனை செய்வதாக இருந்தால் அது வேண்டாம். தயவுசெய்து அவரைத் தனியாக விடுங்கள். தினமும் காலையில் நீங்கள் செய்யும் தொலைபேசி அழைப்பின்றி, அவரால் இருக்க முடியும். வாரம் ஏழு நாட்களும் அவரை அழைத்து தொந்தரவு செய்கிறீர்கள். உங்களை முட்டாளாக்கும் ஒவ்வொரு செயலும் உங்களுக்கும் நல்லதல்ல. இந்த உலகிற்கும் நல்லதல்ல.

பிரார்த்தனை செய்பவர்கள் தான் உலகிலேயே மிகவும் கொடூரமானவர்களாக இருக்கின்றனர். எப்போதும் இப்படித்தானிருக்கிறது. பிரார்த்தனை செய்யத் தேவை இல்லாதவர்களுக்கு எவரையும் கொல்லுவதற்கான காரணமும் இருக்காது.

அவர்கள் தங்கள் வாழ்வை எப்படிச் சந்தோஷமாக நடத்தலாம் என்பதில் கவனம் செலுத்துவார்கள். உங்களுக்கு தெரியுமா? உலகை வெற்றி கொள்ள வேண்டுமென்கிற ஏக்கம் அவர்களும் இருக்காது.

தன்னிடம் கடவுள் இருப்பதாக நம்புபவர்கள் தான் உலகம் முழுவதையும் வெற்றி காண்பதற்கான முயற்சியை மேற்கொள்வார்கள். 'தாங்கள் தான் எல்லாம்' என்று நம்புவர்கள் மனிதர்களைப் போல் வாழ முயற்சி செய்வார்கள்.

தற்போது எங்கோ குழந்தைகள் இறக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு பிரார்த்தனை மட்டும் செய்வீர்கள். உங்கள் குழந்தை இறக்குமென்றால், பிரார்த்தனை மட்டும் செய்துவிட்டு அதை அப்படியே விட்டு விட உங்களால் முடியுமா? உங்கள் குழந்தை இறந்தால், அதற்குத் தேவையான செயல் செய்கிறீர்கள். அப்படித்தானே? பிறருடைய குழந்தை இறந்தால் பிரார்த்தனை மட்டும் செய்கிறீர்கள்.

இது மிகப் பெரிய ஏமாற்றுவேலை. அப்படித் தானே! அப்படியில்லை. வேறு எங்கோ, உலகின் வேறு ஏதோவொரு பகுதியில் இறப்பவர்களுக்கு நான் என்ன செய்ய முடியுமென்று நீங்கள் கூறலாம். நீங்கள் சென்று அந்தக் குறிப்பிட்ட குழந்தையைக் காப்பாற்ற இயலாமல் போகலாம். ஆனால், ஏதோஒன்று உங்களால் செய்ய முடியும். நீங்கள் கவனித்துப் பார்த்தால், உலகில் தற்போது நிலவும் சூழ்நிலையை மாற்றும் வகையில் உங்களால் ஏதோ ஒன்று செய்ய முடியும். சிலரால் அதிகம் செய்ய முடியும். சிலரால் சிறிதளவே செய்ய முடியும். அது விஷயமல்ல.

ஆனால், ஒவ்வொருவராலும் ஏதோ சிறிது செய்ய முடியும். எவ்வளவு செயல் செய்கிறோமென்பது சக்தியையும், தைரியத்தையும், அறிவையும் அனைத்திற்கும் மேலாக ஈடுபாட்டையும் பொறுத்தது.

எனவே துன்பம் வந்துவிட்டது என்றால் சரியான செயல் செய்யத் தேவையிருக்கிறது. அதற்குப் பக்கபலமாக பிரார்த்தனை செய்தால் சரி. ஆனால், வாழ்வின் யதார்த்தங்களிலிருந்து தப்பிப்பதற்காக என்றால், பிரார்த்தனை செய்யாமல் இருப்பது நல்லது.

பிரார்த்தனை கடவுளைப் பற்றியது அல்ல என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். யாரும் உங்கள் பிரார்த்தனையைக் கேட்கப் போவதில்லை. எப்படியோ நீங்கள் தேவையற்ற விஷயங்களைத் தான் கூறப் போகிறீர்கள். அறிவுள்ள எவரும் அதைக் கேட்கப் போவதில்லை. படைத்தவனும் இதை நிச்சயமாகக் கேட்கப் போவதில்லை.

பிரார்த்தனை என்பது ஒரு குறிப்பிட்ட திசையில் உங்களை எடுத்துச் செல்வதற்கான ஒரு கருவி. உங்கள் உள் சூழ்நிலையை மாற்றுவதற்கு அதை நீங்கள் உபயோகிக்கலாம். நீங்கள் உண்மையில் தியான நிலைக்குச் சென்றால், ஏதோவொரு தியான நேரம் என்று மட்டுமல்லாமல் வாழ்க்கையின் தன்மையையே தியானத்தின் தன்மையாக மாற்றிக் கொள்ள முடியும். அப்போது பிரார்த்தனை என்பது அர்த்தமற்றுப் போய்விடும்.

உங்களைத் தியான தன்மைக்கு இட்டுச் செல்லும் ஒரு கருவியாக பிரார்த்தனை இருந்தால் சரி தான். ஆனால், நீங்கள் செய்யும் பிரார்த்தனையை யாரோ கேட்டு உங்களுக்காக நடத்தித் தருவார்கள் என்று உணர்ச்சிப்பூர்வமாக நம்பிக் கொண்டிருந்தால், பிரார்த்தனை செய்யாமலிருப்பதே நல்லது. உண்மையில் பிரார்த்தனை இந்தப் பூமிக்கு அதிகமான சேதத்தையே ஏற்படுத்தியுள்ளது.